## 11th History Lesson 11 Questions in Tamil

## 11] மராத்தியர்கள்

1) முகலாயரின் வீழ்ச்சியில் முக்கியப் பங்கு வகித்தவர்கள் யார்?

A) மராத்தியர்

B) ஆங்கிலேயர்

C) போர்த்துக்கீசியர்

D) ராஜபுத்திரர்கள்

2) தஞ்சாவூரில் நாயக்க மன்னரின் ஆட்சி முடிவடைந்த உடன் மராத்திய ஆட்சியை ஏற்படுத்துவதில் வெற்றி கண்டவர்?

A) வெங்கோஜி

B) சாம்பாஜி

C) சாகு

D) ராஜாராம்

3) தஞ்சாவூரில் மராத்தியரின் ஆட்சி எந்த ஆண்டு தொடங்கப்பட்டது?

A) 1664

B) 1684

C) 1674

D) 1774

4) மராத்தியர் வாழ்ந்த குறுகலான நிலப்பகுதி எவ்வாறு அழைக்கப்பட்டது?

A) மலபார்

B) கொரமண்டல்

C) கொங்கணம்

D) மத்தியப்பகுதி

5) சிவாஜி காலத்தில் எழுச்சிப் பெற்ற மராத்தியர் முன்னதாக யாருடைய ஆட்சியின் கீழ் செயல்பட்டனர்?

A) பாமினி சுல்தான்

B) முகலாயர்

C) ராஜபுத்திரர்கள்

D) சாளுக்கியர்கள்

6) கீழ்க்கண்டவற்றுள் சரியான கூற்றினைத் தேர்ந்தெடு.

i ) வலிமை மிகுந்த காலாட்படையும் ஆபத்தான ஆயுதங்களையும் கொண்டிருந்த முகலாய இராணுவத்துடன் நேரடியாக மோதுவதை மராத்தியர் தவிர்த்தனர்.

ii ) கொரில்லா தாக்குதல் முறை அவர்களின் வலிமையாகத் திகழ்ந்தது.

A) (i) சரி

B) (ii) சரி

C) (i) மற்றும் (ii) சரி

D) (i) மற்றும் (ii) தவறு

7) கீழ்க்கண்டவற்றுள் சரியான கூற்றினைத் தேர்ந்தெடு.

i ) பக்தி இயக்கம் பரவியதன் மூலமாக மராத்தியரிடம் வே ற் று மை உண ர் வு மேலோங்கியது

ii ) துக்காராம், ராம்தாஸ், ஏக்நாதர் , ஆகியோர் பக்தி இயக்கத்தின் முன்னோடிகளாக த் தி கழ்ந்தனர்.

A) (i) சரி

B) (ii) சரி

C) (i) மற்றும் (ii) சரி

D) (i) மற்றும் (ii) தவறு

8) "(மராத்திய நாட்டில்) மத எழுச்சி என்பது பிராமணச் சமயம் சார்ந்ததாக இல்லை" என்பது யார் கூற்று?

A) ரானடே

B) தாதாபாய் நௌரோஜி

C) வீரராகவாச்சாரி

D) மஜூம்தார்

9) கீழ்க்கண்டவற்றுள் மராத்திய அரசுக்கு தலைநகராக விளங்கியது எது?

A) ராய்கர்

B) அகமது நகர்

C) சதாரா

D) பூனா

10) கீழ்க்கண்டவற்றுள் சிவாஜி பிறந்த இடம் எது?

A) ராய்கர்

B) புரந்தர்

C) ஷிவ்னர்

D) கோல்கர்

11) தாய் வழியில் யாதவ மன்னர்களின் வழித்தோன்றலாகவும் தந்தை வழியில் சிசோடியாக்களின் வழித்தோன்றலாகவும் விளங்கியவர் யார்?

A) தாதாஜி கொண்டதேவ்

B) சிவாஜி

C) ஷாஜி போன்ஸ்லே

D) வெங்கோஜி

12) மாலிக் அம்பர் யாருடைய ஆட்சி யில் அமைச்சராக விளங்கினார்?

A) முகமது அலி

B) அகமது ஷா

C) ஜெய்சிங்

D) ஆலம் ஷா

13) அகமதுநகர் முகலாயர்களால் இணைக்கப்பட்ட பிறகு ஷாஜி போன்ஸ்லே யாரிடம் தன் பணியைத் தொடர்ந்தார்?

A) முராத்

B) செயிஷ்டகான்

C) பீஜப்பூர் சுல்தான்

D) மாலிக் அம்பர்

14) சிவாஜியும் அவரது தாயும் யாருடைய பராமரிப்பில் விடப்பட்டனர்?

A) தாதாஜி கொண்டதேவ்

B) நானாசாகிப்

C) ஜெய்சிங்

D) மாலிக் அம்பர்

15) சிவாஜி தனது குருவாக ஏற்று மரியாதை செலுத்திய துறவி யார்?

A) ராம்தாஸ்

B) துக்காராம்

C) ஏக்நாத்

D) சைதன்யர்

16) சிவாஜி தமது எத்தனையாவது வயது முதல் இராணுவத்தில் ஈடுபாடு காட்டத் தொடங்கினார்?

A) 19

B) 18

C) 20

D) 16

17) தாதாஜி கொண்டதேவ் மறைந்த பிறகு தமது தந்தையின் (ஜாகீர்) நிலத்தை நிர்வகிக்கும் பொறுப்பை ஏற்றவர்?

A) ஜீஜாபாய்

B) சிவாஜி

C) ஷாஜி போன்ஸ்லே

D) சாந்தாஜி

18) சிவாஜியின் தந்தையை சிறுமைப்படுத்திச் சிறையில் அடைத்தவர்?

A) ஔரங்கசீப்

B) பீஜப்பூர் சுல்தான்

C) ஜெய்சிங்

D) செயிஷ்டகான்

19) சிவாஜி இராணுவச் செயல்பாடுகளில் ஈடுபடுவதிலிருந்து விலகியிருந்த காலகட்டம் எது?

A) 1639 முதல் 1645 வரை

B) 1640 முதல் 1655 வரை

C) 1647 முதல் 1653 வரை

D) 1649 முதல் 1655 வரை

20) ஜாவ்லி என்ற இடத்திலிருந்து மேற்கே இரண்டு மைல் தொலைவில் சிவாஜியால் கட்டப்பட்ட புதிய கோட்டை எது?

A) பிரதாப்கர்

B) புரந்தர்

C) தோர்னா

D) ராய்கர்

21) பீஜப்பூரின் முகமது அடில்ஷா மரணமடைந்த பிறகு ஆட்சிப் பொறுப்பேற்றவர்?

A) சிவாஜி

B) அகமது அடில்ஷா

C) ஜெய்சிங்

D) இரண்டாம் அடில்ஷா

22) கூற்று (கூ): பீஜப்பூர் சுல்தானும் சிவாஜியும் ஔரங்கசீப்புடன் சமரசம் செய்யவேண்டிய நிலை ஏற்பட்டது.

காரணம் (கா): 1657ஆம் ஆண்டு பீடார், கல்யாணி, பரிந்தர் ஆகியவற்றை ஔரங்கசீப் கைப்பற்றினார்.

A) கூற்று தவறு; காரணம் சரி

B) கூற்று சரி; காரணம் கூற்றினை விளக்குகிறது

C) கூற்று மற்றும் காரணம் தவறானவை

D) கூற்று மற்றும் காரணம் சரியானவை

23) "மலையில் ஒளிந்துகொண்டிருக்கும் எலியை" சங்கிலியில் கட்டி இழுத்துக்கொண்டு வருவதாக சூளுரைத்தவர்?

A) ஜெய்சிங்

B) இரண்டாம் அடில்ஷா

C) செயிஷ்டகான்

D) அஃப்சல்கான்

24) பீஜப்பூர் சுல்தான் உடனான போரில் மராத்தியர்கள் கைப்பற்றிய கோட்டை எது?

A) புரந்தர்

B) ராய்கர்

C) பன்ஹலா

D) செஞ்சிக்கோட்டை

25) சிவாஜியை அடக்குவதை முக்கிய நோக்கமாகக் கொண்டு 1660ஆம் ஆண்டு தக்காணத்தின் ஆளுநராக நியமிக்கப்பட்டவர்?

A) ஜெய்சிங்

B) மூர்வாசம்

C) செயிஷ்டகான்

D) அஃப்சல்கான்

26) கூற்று (கூ): ஓர் இரவு நேரத்தில், பூனாவுக்கு 400 படை வீரர்களுடன் திருமணக் குழுவினர் போல் சென்ற அவர் செயிஷ்டகானின் இல்லம் மீது தாக்குதல் நடத்தினார்.

காரணம் (கா): இதனால் 1663 டிசம்பர் மாதம் ஔரங்கசீப் செயிஷ்டகானை தக்காணத்திலிருந்து திரும்ப அழைத்துக்கொண்டார்.

A) கூற்று தவறு; காரணம் சரி

B) கூற்று சரி; காரணம் கூற்றினை விளக்குகிறது

C) கூற்று மற்றும் காரணம் தவறானவை

D) கூற்று மற்றும் காரணம் சரியானவை

27) அரபிக் கடல் பகுதியில் முகாலாயரின் முக்கியத் துறைமுகமாக விளங்கியது எது?

A) கொச்சின்

B) மங்களூர்

C) சூரத்

D) பூனா

28) சிவாஜியை வீழ்த்துவதற்காகவும் பீஜப்பூரை இணைப்பதற்காகவும் அனுப்பப்பட்ட ரஜபுத்திரத் தளபதி?

A) ஜெய்சிங்

B) மூவாசம்

C) செயிஷ்டகான்

D) அஃப்சல்கான்

29) புரந்தர் உடன்படிக்கை எந்த ஆண்டு ஏற்படுத்தப்பட்டது?
A) 1665 ஜூன் 11
B) 1663 ஜூன் 11
C) 1668 ஜூன் 10
D) 1662 ஜூன் 21

30) கீழ்க்கண்டவற்றுள் சரியான கூற்றினைத் தேர்ந்தெடு.
i ) முகலாய அரசவையை பார்வையிடுமாறு சிவாஜியிடம் ஜெய்சிங் வற்புறுத்தினார்.
ii ) 1665 மே மாதம் சிவாஜியும் அவரது மகன் சாம்பாஜியும் ஆக்ராவை அடைந்தனர்.
A) (i) சரி
B) (ii) சரி
C) (i) மற்றும் (ii) சரி
D) (i) மற்றும் (ii) தவறு

31) ஆண்டு முதல் சிவாஜி தீவிர போர்க் கொள்கையைக் கடைபிடிக்கலானார்?
A) 1664
B) 1665
C) 1666
D) 1772

32) மன்சப்தார் ஐந்தாயிரம் என்ற படிநிலையில் நியமிக்கப்பட்டார்
A) சாம்பாஜி
B) சிவாஜி
C) சாகு
D) சாந்தாஜி

33) கூற்று (கூ): பெராரில் சிவாஜிக்கு முன்னர் கொடுக்கப்பட்ட ஜாகீர் நிலத்தின் ஒரு பகுதியை ஔரங்கசீப் எடுத்துக்கொண்டார்.
காரணம் (கா): இதனால் கோபமடைந்த சிவாஜி முகலாயர் சேவையிலிருந்த தனது படைகளைத் திரும்ப அழைத்துக்கொண்டார்.
A) கூற்று தவறு; காரணம் சரி
B) கூற்று சரி; காரணம் கூற்றினை விளக்குகிறது
C) கூற்று மற்றும் காரணம் தவறானவை
D) கூற்று மற்றும் காரணம் சரியானவை

34) கீழ்க்கண்டவற்றுள் சரியான கூற்றினைத் தேர்ந்தெடு.
i ) 1670ஆம் ஆண்டு மேற்குக் கடற்கரையோரத்தின் முக்கியத் துறைமுகமான சூரத்தை அவர் மீண்டும் கைப்பற்றினார்.
ii ) 1672ஆம் ஆண்டு சூரத்திலிருந்து சௌத் எனப்படும் பத்தில் ஒரு பங்கு வருமானத்தை வருடாந்திரக் கப்பமாக மராத்தியர் பெற்றனர்.
A) (i) சரி
B) (ii) சரி
C) (i) மற்றும் (ii) சரி
D) (i) மற்றும் (ii) தவறு

35) சிவாஜி சத்ரபதி' (Supreme King) என்ற பட்டத்தை எந்த ஆண்டு சூடினார்?
A) 1665
B) 1672
C) 1676
D) 1674

36) சிவாஜி பின்வரும் யாருடன் இரகசிய ஒப்பந்தத்தில் கையெழுத்திட்டார்?
A) ஔரங்கசீப்
B) பீஜப்பூர் சுல்தான்
C) கோல்கொண்டா சுல்தான்
D) சொரூப்சிங்

37) சிவாஜி தஞ்சாவூரை நிர்வகிக்குமாறு யாரை பணித்தார்?
A) சாந்தாஜி
B) வெங்கோஜி
C) முதலாம் சரபோஜி
D) துல்ஜாஜி

38) சிவாஜிக்குப் பிறகு பொறுப்பேற்றவர்களுக்கு இரண்டாம் கட்டப் பாதுகாப்பு அரணாகத் திகழ்ந்தது எது?
A) புரந்தர்
B) செஞ்சி
C) தஞ்சாவூர்
D) மதுரை

39) சாம்பாஜி ஔரங்கசீப்பால் சிறைபிடிக்கப்பட்டு எந்த கோட்டைக்கு அனுப்பப்பட்டார்?
A) பன்ஹலா
B) பிரதாப்கர்
C) ஜாவ்லி
D) கல்யான்

40) சிவாஜி எந்த ஆண்டு காலமானார்?
A) 1678
B) 1680
C) 1684
D) 1679

41) கீழ்க்கண்டவற்றுள் சரியான கூற்றினைத் தேர்ந்தெடு.
i ) சிவாஜியின் மறைவின்போது மேற்குத் தொடர்ச்சி மலைகள், கல்யாண் மற்றும் கோவா இடையேயான கொங்கணப் பகுதி ஆகியன சிவாஜி அரசின் கீழ் இருந்தன.
ii ) தெற்கில் பெல்காம் தொடங்கி துங்கபத்திரை நதிக்கரை வரை மேற்கு கர்நாடகாவை உள்ளடக்கிய பகுதிகள் அவரது கட்டுப்பாட்டின் கீழ் இருந்தன.
A) (i) சரி
B) (ii) சரி
C) (i) மற்றும் (ii) சரி
D) (i) மற்றும் (ii) தவறு

42) கீழ்க்கண்டவற்றுள் சரியான கூற்றினைத் தேர்ந்தெடு.

i ) சாம்பாஜி முகலாயப் பகுதிக்குள் நுழைந்து பெராரில் பகதூர்பூரைக் கைப்பற்றி அங்கிருந்த சொத்துக்களைக் கைப்பற்றினார்.

ii ) ஆத்திரமடைந்த ஔரங்கசீப் மேவாரைச் சேர்ந்த ரஜபுத்திரர்களுடன் சமரசம் மேற்கொண்டு தக்காணப் பகுதிக்குள் படைகளை வழிநடத்திச் சென்றார்.

A) (i) சரி

B) (ii) சரி

C) (i) மற்றும் (ii) சரி

D) (i) மற்றும் (ii) தவறு

43) பின்வரும் எந்த இளவரசருக்கு பாதுகாப்பு கொடுத்ததற்காக ஔரங்கசீப் சாம்பாஜிக்கு தண்டனைக் கொடுத்தார்?

A) இரண்டாம் அக்பர்

B) அகமது ஷா

C) முராத்

D) மூவாசம்

44) செஞ்சிக்கோட்டையிலிருந்து முகலாயருக்கெதிரான சண்டையைத் தொடங்கியவர்?

A) இராஜாராம்

B) சாகு

C) இரண்டாம் சாம்பாஜி

D) தாராபாய்

45) கீழ்க்கண்டவற்றுள் சரியான கூற்றினைத் தேர்ந்தெடு.

i ) சாம்பாஜி 1700இல் மரணமடைந்த பிறகு அவரது மனைவி தாராபாய் தலைமையில் போராட்டம் தொடர்ந்தது.

ii ) இதன் காரணமாக அருகிலிருந்த மசூலிப்பட்டினம் துறைமுகத்தில் வர்த்தகம் பல ஆண்டுகளுக்கு பாதிக்கப்பட்டது

A) (i) சரி

B) (ii) சரி

C) (i) மற்றும் (ii) சரி

D) (i) மற்றும் (ii) தவறு

46) ஔரங்கசீப்பின் மரணத்துக்குப் பிறகு மராத்தியரின் அரியணையை அலங்கரித்தவர்?

A) சாஹூ

B) இரண்டாம் சாம்பாஜி

C) சாம்பாஜி

D) இராஜாராம்

47) பாலாஜி விஸ்வநாத் எங்கிருந்து ஆட்சி செய்யத் தொடங்கினார்?

A) பூனா

B) சதாரா

C) ராய்கர்

D) சூரத்

48) எந்த நகரைத் தலைநகராகக் கொண்டு தாராபாய் ஒரு மாற்று அரசாங்கத்தை நடத்தினார்?

A) சதாரா

B) கோல்ஹாபூர்

C) ஜாவ்லி

D) பூனா

49) கீழ்க்கண்டவற்றுள் சரியான கூற்றினைத் தேர்ந்தெடு.

i ) இரண்டாம் சாம்பாஜி கோல்ஹாபூரில் அரியணை ஏறினார்.

ii ) சாஹூ 1749இல் மறைந்தபிறகு ராம ராஜா அரியணை ஏறினார்.

A) (i) சரி

B) (ii) சரி

C) (i) மற்றும் (ii) சரி

D) (i) மற்றும் (ii) தவறு

50) கீழ்க்கண்டவற்றுள் சரியான கூற்றினைத் தேர்ந்தெடு.

i ) ராமராஜாவின் தத்துப் புதல்வரான இரண்டாவது சாஹூ 1808இல் மரணமடையும் வரை பெயருக்கு மன்னராக ஆட்சியில் இருந்தார்.

ii ) பிரதாப் சிங் பிரிட்டிஷ் அரசுக்கு எதிராக சதித்திட்டம் தீட்டியதாகக் குற்றம் சாட்டி, 1839ஆம் ஆண்டு அவரை பிரிட்டிஷ் அரசு ஆட்சியில் இருந்து நீக்கியது.

A) (i) சரி

B) (ii) சரி

C) (i) மற்றும் (ii) சரி

D) (i) மற்றும் (ii) தவறு

51) கீழ்க்கண்டவற்றுள் சரியான கூற்றினைத் தேர்ந்தெடு.

i ) பிரதாப் சிங்கின் இளவல் ஷாஜி அப்பா சாஹிப், இரண்டாம் ஷாஜி 1839ஆம் ஆண்டு அரசராக பிரிட்டீஷ் அரசால் பதவியில் அமர்த்தப்பட்டா ர்.

ii ) தனக்குப் பின் ஆள்வதற்கு ஒருவருமற்ற நிலையில் இரண்டாம் ஷாஜி 1848இல் மரணமடைந்தார்.

A) (i) சரி

B) (ii) சரி

C) (i) மற்றும் (ii) சரி

D) (i) மற்றும் (ii) தவறு

52) சிவாஜியின் ஆலோசனைக்குழுவில் எத்தனை பேர் இடம்பெற்றிருந்தனர்?

A) எட்டு

B) பத்து

C) ஒன்பது

D) ஏழு

53) மராத்தியர் காலத்தில் நாட்டின் பொதுநலன்கள் மற்றும் முன்னேற்றத்தில் கவனம் செலுத்துவது பின்வரும் யாரின் முக்கிய கடமை?

A) வாக்கியநாவிஸ்

B) பேஷ்வா

C) அமத்யா

D) சுமந்த்

54) மராத்தியர் ஆட்சியில் அரசின் அனைத்துப் பொதுக்கணக்குகளையும் ஆராய்ந்து ஒப்புதல் கையொப்பமிடுவது யாருடைய வேலை?

A) வாக்கியநாவிஸ்

B) பேஷ்வா

C) அமத்யா

D) சுமந்த்

55) அரசரின் நடவடிக்கைகள் மற்றும் நீதிமன்ற நடவடிக்கைகளை ஆவணங்கள் வடிவில் பராமரித்தல் யாருடைய வேலை?

A) வாக்கியநாவிஸ்

B) பேஷ்வா

C) அமத்யா

D) சுமந்த்

56) மன்னருக்குப் போர் மற்றும் அமைதி குறித்த அனைத்து விஷயங்களிலும் ஆலோசனைகளை வழங்கியவர்?

A) வாக்கியநாவிஸ்

B) பேஷ்வா

C) அமத்யா

D) சுமந்த்

57) அரசரின் அன்றாட கடிதப் போக்குவரத்தை கவனித்துக் கொண்டதோடு வரைவுகளைத் திருத்தும் அதிகாரமும் கொண்டிருந்தவர் யார்?

A) சச்சீவ்

B) பண்டிட்ராவ்

C) நியாயதீஷ்

D) சுமந்த்

58) சமூகச் சட்டதிட்டங்கள் மற்றும் பொது ஒழுக்க நடைமுறைகளை நெறிப்படுத்துவதற்கு நீதிபதியாக இருந்தவர் யார்?

A) சச்சீவ்

B) பண்டிட்ராவ்

C) நியாயதீஷ்

D) சாரிநௌபத்

59) மராத்தியர் ஆட்சியில் இராணுவத்தை நிர்வகிப்பது யாருடைய வேலை?

A) சச்சீவ்

B) பண்டிட்ராவ்

C) நியாயதீஷ்

D) சுமந்த்

60) கீழ்க்கண்டவற்றுள் சரியான கூற்றினைத் தேர்ந்தெடு.

i ) நியாயதீஷ் மற்றும் பண்டிட்ராவ் தவிர அமைச்சர்கள் அனைவரும் இராணுவத்தை வழிநடத்துவதற்கு தலைமை ஏற்பதோடு, பயணங்களுக்கும் தலைமை ஏற்க வேண்டும்.

ii ) பல அமைச்சர்களின் கீழ் 18 அரசு துறைகள் இருந்தன.

A) (i) சரி

B) (ii) சரி

C) (i) மற்றும் (ii) சரி

D) (i) மற்றும் (ii) தவறு

61) நிர்வாக வசதிக்காக சிவாஜி தனது அரசை எத்தனை மாகாணங்களாகப் பிரித்தார்?

A) நான்கு

B) ஐந்து

C) மூன்று

D) ஆறு

62) கீழ்க்கண்டவற்றுள் சரியான கூற்றினைத் தேர்ந்தெடு.

i ) மராத்தியர் ஆட்சியில் ஜாகீர் வழங்கும் நடைமுறை ஒழிக்கப்பட்டு அனைத்து அதிகாரிகளுக்கும் ரொக்கமாகப் பணம் வழங்கப்பட்டது.

ii ) ஒரு குறிப்பிட்ட பகுதியின் வருவாய் உள்ளிட்ட அனைத்துப் பொறுப்பும் எந்த ஒரு அதிகாரிக்கு ஒதுக்கப்பட்டிருந்தாலும் சொத்துகள் மூலமாகக் கிடைத்த வருவாய் மட்டுமே அவருக்கு உரியது.

A) (i) சரி

B) (ii) சரி

C) (i) மற்றும் (ii) சரி

D) (i) மற்றும் (ii) தவறு

63) மராத்தியர் ஆட்சியில் நிர்வாக நடைமுறையின் கடைசி அலகாக இருந்தது எது?

A) மாவட்டம்

B) கிராமம்

C) பிராந்தியம்

D) வில்லா

64) சிவாஜியின் வருவாய் நிர்வாகம் நியாயமானதாக யாருக்குச் சாதகமாக அமைந்திருந்தது?

A) நுகர்வோர்

B) விற்பனையாளர்

C) உற்பத்தியாளர்

D) வரி வசூலிப்போர்

65) கீழ்க்கண்டவற்றுள் சரியான கூற்றினைத் தேர்ந்தெடு.

i ) மராத்தியர் ஆட்சியில் பஞ்சகாலத்தில் அரசு பணத்தையும் உணவுதானியங்களையும் உழவர்களுக்கு முன்பணம் அல்லது முன்பொருளாகக் கொடுத்தது.

ii ) விவசாயிகள் கால்நடை வாங்க, விதைப்புக்காக, இன்னபிற தேவைகளுக்காகக் கடன்கள் வழங்கப்பட்டன.

A) (i) சரி

B) (ii) சரி

C) (i) மற்றும் (ii) சரி

D) (i) மற்றும் (ii) தவறு

66) அரசு வசூலிக்கும் வருவாய், தேவைகளுக்குப் போதுமானதாக இல்லாத நிலையில் விதிக்கப்பட்ட வரிகள்?

A) சௌத்

B) சர்தேஷ்முகி

C)A) மற்றும்B)

D) சதமனா

67) மரபுவழியாகத் தனது நாட்டின் சர்தேஷ்முக் ஆக விளங்கியவர்?

A) சிவாஜி

B) ஷாஜி போன்ஸ்லே

C) பாலாஜி விஸ்வநாத்

D) ராம்தாஸ்

68) கீழ்க்கண்டவற்றுள் சரியான கூற்றினைத் தேர்ந்தெடு.

i ) சிவாஜி நிலையான இராணுவத்தைக் கொண்டிருந்தார்.

ii ) ஜாகீர்களை வழங்குவதையும் மரபுவழியாகச் செய்யப்படும் நியமனங்களையும் அவர் ஊக்கப்படுத்தவில்லை.

A) (i) சரி

B) (ii) சரி

C) (i) மற்றும் (ii) சரி

D) (i) மற்றும் (ii) தவறு

69) ரெஜிமெண்டுகள், பிரிகேடுகள் எனப்பிரிக்கப்பட்ட படைப்பிரிவு எது?

A) காலாட்படை

B) குதிரைப்படை

C) யானைப்படை

D) ஆயுதப்படை

70) கீழ்க்கண்டவற்றுள் சரியான விடையைத் தேர்ந்தெடு

A) ஹவில்தார் < ஜமால்தார் < ஹஜாரி < சாரிநௌபத்

B) ஜமால்தார் < ஹஜாரி < ஹவில்தார் < சாரிநௌபத்

C) சாரிநௌபத் < ஜமால்தார் < ஹஜாரி < ஹவில்தார்

D) ஹஜாரி < ஹவில்தார் < சாரிநௌபத் < ஜமால்தார்

71) அரசு மூலமாகக் குதிரைகள் வழங்கப்பட்ட படைவீரர்கள் எவ்வாறு அழைக்கப்பட்டனர்?

A) பர்கிர்கள்

B) ஷைலேதார்கள்

C) ஹஜாரிகள்

D) ஹவில்தார்கள்

72) கீழ்க்கண்டவற்றுள் சரியான கூற்றினைத் தேர்ந்தெடு.

i ) மராத்தியர் ஆட்சியில் நீதி நிர்வாகம் மரபுவழிப்பட்டதாக இருந்தது.

ii ) நிரந்தரமான நீதிமன்றங்களோ நிரந்தரமான நீதிவழிமுறைகளோ இல்லை, விசாரணைமுறை அனைவருக்கும் பொதுவாக இருந்தது.

A) (i) சரி

B) (ii) சரி

C) (i) மற்றும் (ii) சரி

D) (i) மற்றும் (ii) தவறு

73) கீழ்க்கண்டவற்றுள் சரியான கூற்றினைத் தேர்ந்தெடு.

i ) மராத்தியர் ஆட்சியில் சிவில், கிரிமினல் வழக்குகளுக்கான மேல்முறையீடுகளைத் தலைமை நீதிபதி நியாயதேஷ், ஸ்மிருதிகளின் ஆலோசனையோடு விசாரித்தார்.

ii ) 'ஹவில்தார்மஜ்லிம்' இறுதி மேல்முறையீட்டு நீதிமன்றமாக இருந்தது.

A) (i) சரி

B) (ii) சரி

C) (i) மற்றும் (ii) சரி

D) (i) மற்றும் (ii) தவறு

74) சிவாஜியின் அமைச்சரவையான அஷ்டபிரதான் அமைப்பில் முதன்மையானவர் யார்?

A) வாக்கியநாவிஸ்

B) சச்சீவ்

C) பண்டிட்ராவ்

D) பேஷ்வா

75) உள்நாட்டுப் போரால் சிக்கலிலிருந்த அரசைக் கட்டுப்பாட்டில் கொண்டுவர சாஹூவுக்கு உதவியவர்?

A) பாலாஜி பாஜிராவ்

B) இரண்டாம் பாஜிராவ்

C) பாலாஜி விஸ்வநாத்

D) ஔரங்கசீப்

76) மேற்குக் கரையோரத்தில் அதிக அதிகாரம் படைத்த கடற்படைத் தளபதியாகத் திகழ்ந்தவர்?

A) கனோஜி ஆங்கிரே

B) மாலிக் ஆம்பர்

C) பாலாஜி பாஜிராவ்

D) திரிம்பக்ராவ்

77) பாலாஜி விஷ்வநாத்துக்குப் பிறகு சாஹூவால் பேஷ்வாவாக நியமிக்கப்பட்டவர்?

A) பாலாஜி பாஜிராவ்

B) இரண்டாம் பாஜிராவ்

C) முதலாம் பாஜிராவ்

D) சதாசிவ ராவ்

78) பேஷ்வாவுக்கு சிம்மசொப்பனமாக விளங்கிய தலைமைத் தளபதி யார்?

A) கனோஜி ஆங்கிரே

B) மாலிக் ஆம்பர்

C) நானா சாகிப்

D) திரிம்பக்ராவ்

79) எந்த ஒப்பந்தத்தின்படி சாஹூவின் இறையாண்மையை ஏற்குமாறு கோல்ஹாபுரின் சாம்பாஜிக்கு நெருக்குதல் அளிக்கப்பட்டது?

A) வார்னா ஒப்பந்தம்

B) தோர்னா ஒப்பந்தம்

C) புரந்தர் ஒப்பந்தம்

D) ஜாவ்லி ஒப்பந்தம்

80) கீழ்க்கண்டவற்றுள் சரியான கூற்றினைத் தேர்ந்தெடு.

i ) தானே, சால்செட், பேசின் ஆகிய பகுதிகள் 1738இல் போர்த்துகீசியரிடமிருந்து கைப்பற்றப்பட்டு அவர்கள்

winmeen.com

கொங்கணக் கடற்கரைப் பிரதேசத்திலிருந்து விரட்டியடிக்கப்பட்டனர்.

ii ) மராத்தியருடன் ஆங்கிலேயர் நட்புறவை ஏற்படுத்தியதன் மூலம் தக்காணப்பகுதியில் தடையில்லா வணிகம் செய்யும் உரிமையைப் பெற்றார்கள்.

A) (i) சரி

B) (ii) சரி

C) (i) மற்றும் (ii) சரி

D) (i) மற்றும் (ii) தவறு

81) நானா சாகிப் என்று அழைக்கப்பட்ட பேஷ்வா யார்?

A) பாலாஜி பாஜிராவ்

B) இரண்டாம் பாஜிராவ்

C) பாலாஜி விஸ்வநாத்

D) முதலாம் பாஜிராவ்

82) கீழ்க்கண்டவற்றுள் சரியான கூற்றினைத் தேர்ந்தெடு.

i ) 1739இல் தஞ்சாவூரை ஆண்ட மராத்திய ஆட்சியாளர் சாஹூவிடம் உதவி கோரினார்.

ii ) 1740ஆம் ஆண்டு ரகுஜி போன்ஸ்லே ஆற்காடு நவாப் தோஸ்த் அலியை வீழ்த்திக் கொன்றார்.

A) (i) சரி

B) (ii) சரி

C) (i) மற்றும் (ii) சரி

D) (i) மற்றும் (ii) தவறு

83) கீழ்க்கண்டவற்றுள் சரியான கூற்றினைத் தேர்ந்தெடு.

i ) புந்தேல்கண்ட் மற்றும் வங்காளத்தில் நடந்த இராணுவத் தாக்குதல்களில் பேஷ்வா ஈடுபட்டிருந்ததால் அடுத்து வந்த நவாப் முகமது அலி 1743இல் ஆற்காட்டை எளிதாகக் கைப்பற்றியதோடு திருச்சிராப்பள்ளியையும் மீட்டார்.

ii ) மராத்தியரின் அதிகாரம் மீண்டும் நிலைநிறுத்தப்பட்டபோதிலும் அவர்களால் திருச்சிராப்பள்ளியை மீட்க முடியவில்லை.

A) (i) சரி

B) (ii) சரி

C) (i) மற்றும் (ii) சரி

D) (i) மற்றும் (ii) தவறு

84) உத்கிர் போர் எந்த ஆண்டு நடைபெற்றது?

A) 1760

B) 1770

C) 1765

D) 1772

85) யாருடைய தலைமையில் பேஷ்வா அனுப்பிய இராணுவம் உத்கிர் போரில் எதிரிகளை வீழ்த்தியது?

A) பாலாஜி பாஜிராவ்

B) இரண்டாம் பாஜிராவ்

C) பாலாஜி விஸ்வநாத்

D) சதாசிவராவ்

86) கீழ்க்கண்டவற்றுள் சரியான கூற்றினைத் தேர்ந்தெடு.

i ) ராஜபுதனத்தை (1741 முதல் 1748 வரை) ஆறு தாக்குதல் முயற்சிகளுக்குப் பிறகு மராத்தியர் தங்கள் ஆளுகையின் கீழ் கொண்டு வந்தார்கள்.

ii ) 1781 இல் வங்காள நவாப் ஒரிஸ்ஸாவைக் கைவிட்டு மராத்தியருக்கு கப்பம் கட்ட வேண்டிய நிலைமை ஏற்பட்டது.

A) (i) சரி

B) (ii) சரி

C) (i) மற்றும் (ii) சரி

D) (i) மற்றும் (ii) தவறு

87) மராத்தியரின் உதவியோடு வைஸ்ராயாகப் பொறுப்பேற்றவர்?

A) மீர்மன்னு

B) இமாத் உல் முல்க்

C) தைமூர் ஷா

D) மீர் பக்ஷி

88) ஆப்கானிஸ்தானில் துராணி சாம்ராஜ்யத்தை நிறுவியவர்?

A) நாதிர்ஷா

B) முகமது ஷா

C) தைமூர் ஷா

D) அகமது ஷா அப்தலி

89) கீழ்க்கண்டவற்றுள் சரியான கூற்றினைத் தேர்ந்தெடு.

i ) 1757இல் நடந்த பிளாசி போரில் சிராஜ் உத் தௌலாவுக்கு மராத்தியர் உதவவில்லை.

ii ) சீக்கியர், ஜாட் தலைவர்கள், முஸ்லிம்கள் ஆகியோர் மராத்தியரை நம்பத் தயாராக இல்லை.

A) (i) சரி

B) (ii) சரி

C) (i) மற்றும் (ii) சரி

D) (i) மற்றும் (ii) தவறு

90) மூன்றாம் பானிபட் போர் நடைபெற்ற ஆண்டு?

A) 1761

B) 1782

C) 1765

D) 1776

91) கீழ்க்கண்டவற்றுள் சரியான கூற்றினைத் தேர்ந்தெடு.

i ) மூன்றாவது பானிப்பட் போர், 1761 இந்திய வரலாற்றில் 1761இல் நடந்த மூன்றாவது பானிப்பட் போர் முக்கிய முடிவைக் கொடுத்ததாகும்.

ii ) இந்தப் போரில் மராத்தியர்க்கும் முகலாயருக்கும் கிடைத்த மிகப் பெரிய தோல்வி இந்தியாவில் ஆங்கிலேய அரசு காலூன்ற வழி வகுத்தது.

A) (i) சரி

B) (ii) சரி

C) (i) மற்றும் (ii) சரி

D) (i) மற்றும் (ii) தவறு

92) கோகினூர் வைரம், மதிப்புமிகு மயிலாசனம் ஆகியவற்றை அவர் கைப்பற்றிச் சென்றவர்?

A) நாதிர்ஷா

B) அகமது ஷா அப்தாலி

C) தைமூர் ஷா

D) மீர்பக்ஷி

93) கீழ்க்கண்டவற்றுள் சரியான கூற்றினைத் தேர்ந்தெடு.

i ) 1747இல் நாதிர் ஷா கொல்லப்பட்ட பிறகு அவரது இராணுவ தளபதிகளில் ஒருவரான அகமதுஷா அப்தலி ஆப்கானிஸ்தானின் ஆட்சியாளராக மாறினார்.

ii ) முல்தான் மற்றும் பஞ்சாபை அவருக்குத் தாரை வார்த்த முகலாய மாமன்னர் அமைதியை நிலை நிறுத்தினார்.

A) (i) சரி

B) (ii) சரி

C) (i) மற்றும் (ii) சரி

D) (i) மற்றும் (ii) தவறு

94) பஞ்சாப் ஆளுநராக முகலாய மாமன்னரால் நியமிக்கப்பட்டவர?

A) மீர்மன்னு

B) இமாத் உல் முல்க்

C) மீர் முனிம்

D) மீர்பக்ஷி

95) அப்தலி தில்லியில் தனது பிரதிநிதியாக யாரை நியமனம் செய்தார்?

A) மீர்மன்னு

B) இமாத் உல் முல்க்

C) மீர் முனிம்

D) மீர்பக்ஷி

96) கீழ்க்கண்டவற்றுள் சரியான கூற்றினைத் தேர்ந்தெடு.

i ) அப்தலி தில்லியிலிருந்து வெளியேறிய பிறகு மல்ஹர் ராவ் ஹோல்கர், ரகுநாத ராவ் ஆகியோரின் தலைமையின் கீழ் ஒரு தாக்குதல் நடந்தது.

ii ) லாகூர், முல்தான், சர்கிந்த் ஆகிய பகுதிகளிலிருந்து வெளியேற வேண்டிய நிலைமைக்கு மராத்தியர் தள்ளப்பட்டனர்.

A) (i) சரி

B) (ii) சரி

C) (i) மற்றும் (ii) சரி

D) (i) மற்றும் (ii) தவறு

97) கீழ்க்கண்டவற்றுள் சரியான கூற்றினைத் தேர்ந்தெடு.

i ) பஞ்சாபின் நிலைமையைச் சீராக்குவதற்காக மகாதாஜி சிந்தியாவின் சகோதரரான தத்தாஜி சிந்தியாவை பேஷ்வா அங்கு அனுப்பினார்

ii ) சதாசிவ ராவின் தலைமையில் பெரும்படையைப் பேஷ்வா உருவாக்கினார்.

A) (i) சரி

B) (ii) சரி

C) (i) மற்றும் (ii) சரி

D) (i) மற்றும் (ii) தவறு

98) கீழ்க்கண்டவற்றுள் சரியான கூற்றினைத் தேர்ந்தெடு.

i ) ரோகில்கண்டின் நஜீப் உத் தௌலா மற்றும் அயோத்தியின் ஷுஜா உத் தௌலா ஆகியோருடன் கூட்டணி அமைத்து அப்தலி பதிலடி கொடுத்தார்.

ii ) அயோத்தி நவாப், சீக்கியர், ஜாட் தலைவர்கள் ஆகியோரைப் பகைத்துக்கொண்ட மராத்தியர், ரஜபுத்திரர்களின் நம்பிக்கையையும் இழந்தனர்.

A) (i) சரி

B) (ii) சரி

C) (i) மற்றும் (ii) சரி

D) (i) மற்றும் (ii) தவறு

99) கீழ்க்கண்டவற்றுள் சரியான கூற்றினைத் தேர்ந்தெடு.

i ) பேஷ்வாவின் இளைய புதல்வர் விஸ்வாஸ் ராவின் ஒட்டுமொத்த தலைமையின் கீழ் மராத்திய இராணுவம் இருந்தது.

ii ) படைகளுக்கு சதாசிவ ராவ் உண்மையான தளபதியாகத் திகழ்ந்தார்.

A) (i) சரி

B) (ii) சரி

C) (i) மற்றும் (ii) சரி

D) (i) மற்றும் (ii) தவறு

100) இரண்டாம் ஆலம்கீரின் படுகொலையைத் திட்டமிட்ட வசீர் யாருக்கு பட்டம் சூட்டினார்?

A) மூன்றாம் ஷாஜகான்

B) இரண்டாம் ஷா ஆலம்

C) மூன்றாம் அக்பர்

D) இரண்டாம் பகதூர் ஷா

101) சதாசிவ ராவ் மூன்றாம் ஷாஜகானை ஆட்சியிலிருந்து அகற்றிவிட்டு யாரை மன்னராக அறிவித்தார்?

A) மூன்றாம் பகதூர்ஷா

B) இரண்டாம் ஷா ஆலம்

C) மூன்றாம் அக்பர்

D) இரண்டாம் பகதூர் ஷா

102) கீழ்க்கண்டவற்றுள் சரியான கூற்றினைத் தேர்ந்தெடு.

i ) மூன்றாவது பானிப்பட் போரில் பேஷ்வாவின் மகன் விஸ்வாஸ் ராவ், சதாசிவ ராவ், மற்றும் எண்ணற்ற மராத்திய தளபதிகள் கொல்லப்பட்டனர்.

ii ) இதயம் நலிவடைந்த பேஷ்வா 1761 ஜூனில் மரணமடைந்தார்.

A) (i) சரி

B) (ii) சரி

C) (i) மற்றும் (ii) சரி

D) (i) மற்றும் (ii) தவறு

103) பானிப்பட் போருக்குப் பிறகு அப்தலி யாரை தில்லியின் மன்னராக அங்கீகரித்தார்?

A) மூன்றாம் பகதூர்ஷா

B) இரண்டாம் ஷா ஆலம்

C) மூன்றாம் அக்பர்
D) இரண்டாம் பகதூர் ஷா

104) 1761ஆம் ஆண்டு , பேஷ்வாவின் இளைய சகோதரர் ரகோபாவின் ஆட்சியில் பேஷ்வா ஆகப் பதவியேற்றார்.
A) விஸ்வாசராவ்
B) மூன்றாம் ம் பாஜிராவ்
C) மாதவ் ராவ்
D) சதாசிவ ராவ்

105) கீழ்க்கண்டவற்றுள் சரியான கூற்றினைத் தேர்ந்தெடு.
i ) பானிப்பட் போரில் இழந்த மராத்திய அதிகாரத்தை மீட்க மாதவ் ராவ் முயன்றார்.
ii ) 1763ஆம் ஆண்டு ஹைதராபாத் நிஜாமுடன் கடும் சண்டை நடந்தது.
A) (i) சரி
B) (ii) சரி
C) (i) மற்றும் (ii) சரி
D) (i) மற்றும் (ii) தவறு

106) கீழ்க்கண்டவற்றுள் சரியான கூற்றினைத் தேர்ந்தெடு.
i ) மாதவ் ராவ் ரோகில்லாக்களை (பதான்கள்) வீழ்த்தி ரஜபுத்திர அரசுகளையும் ஜாட் தலைவர்களையும் அடிமைப்படுத்தி வட இந்தியா மீதான தனது கட்டுப்பாட்டை அவர் உறுதி செய்தார்.
ii ) தப்பியோடிய மன்னரான இரண்டாம் ஷா ஆலம் அலகாபாத்தில் ஆங்கிலேயரின் பாதுகாப்பிலிருந்தார்.
A) (i) சரி
B) (ii) சரி
C) (i) மற்றும் (ii) சரி
D) (i) மற்றும் (ii) தவறு

107) முதலாம் மாதவ் ராவுக்கு பிறகு பேஷ்வா ஆகப் பொறுப்பேற்றவர் யார்?
A) விஸ்வாசராவ்
B) மூன்றாம் பாஜிராவ்
C) நாராயண் ராவ்
D) சதாசிவ ராவ்

108) கீழ்க்கண்டவற்றுள் சரியான கூற்றினைத் தேர்ந்தெடு.
i ) நானா பட்னாவிஸ் ஆட்சியில் ரகுநாத் ராவ் சிறுவனாக இருந்ததால் முன்னாள் பேஷ்வாவான முதலாம் மாதவ்ராவின் மாமா மாதவ் ராவ் நாராயண் பேஷ்வா அதிகாரத்தைக் கைப்பற்றினார்
ii ) சால்செட், பேசின் ஆகிய பகுதிகளை ரகுநாத் ராவ் திரும்பப் பெற பம்பாயிலிருந்த கம்பெனி நிர்வாகம் ஆதரவாக இருந்தது.
A) (i) சரி
B) (ii) சரி
C) (i) மற்றும் (ii) சரி
D) (i) மற்றும் (ii) தவறு

109) கீழ்க்கண்டவற்றுள் சரியான கூற்றினைத் தேர்ந்தெடு.
i ) மகாதாஜி சிந்தியாவும் நாக்புரின் போன்ஸ்லேயும் ஆங்கிலேய ஆதரவாளர்களாக ஆனதை அடுத்து மராத்தியர் சால்செட், தானே ஆகிய பகுதிகளை ஆங்கிலேயருக்குத் தாரை வார்க்க நேரிட்டது.
ii ) சால்பை உடன்படிக்கையின் படி 1782இல் ரகுநாத் ராவ் கட்டாய ஓய்வு பெற வைக்கப்பட்டார்.
A) (i) சரி
B) (ii) சரி
C) (i) மற்றும் (ii) சரி
D) (i) மற்றும் (ii) தவறு

110) இரண்டாம் ஆங்கிலேய மராத்தியப் போர் நடைபெற்ற ஆண்டு?
A) 1803 – 1806
B) 1813 – 1817
C) 1796 – 1799
D) 1776 – 1784

111) பேசின் ஒப்பந்தம் எந்த ஆண்டு கையெழுத்தானது?
A) 1803
B) 1802
C) 1799
D) 1806

112) பேஷ்வாவின் விருப்பத்துக்கு உகந்த திரிம்பக்ஜியால் கொல்லப்பட்டவர்?
A) கனோஜி ஆங்கிரே
B) ஸ்டூவர்ட் எல்பின்ஸ்டோன்
C) நானா சாகிப்
D) கங்காதர் சாஸ்திரி

113) கூற்று (கூ): 1817ஆம் ஆண்டு பூனா ஒப்பந்தத்தில் கையெழுத்திட ஆட்சியாளர்களை ஆங்கிலேயர்கள் வற்புறுத்தினார்கள்.
காரணம் (கா): மராத்தியக் கூட்டமைப்பை உருவாக்க ஆங்கிலேயருக்கு எதிராக சிந்தியா, போன்ஸ்லே, ஹோல்கர் ஆகியோருடன் சதித்திட்டம் தீட்டியதாகப் பேஷ்வா மீது குற்றச்சாட்டு சுமத்தப்பட்டது.
A) கூற்று தவறு; காரணம் சரி
B) கூற்று சரி; காரணம் கூற்றினை விளக்குகிறது
C) கூற்று மற்றும் காரணம் தவறானவை
D) கூற்று மற்றும் காரணம் சரியானவை

114) கீழ்க்கண்டவற்றுள் சரியான கூற்றினைத் தேர்ந்தெடு.
i ) பூனா ஒப்பந்தத்தின்படி மராத்தியக் கூட்ட மைப்பின் தலைமையிலிருந்து பேஷ்வா பதவி விலகினார்.
ii ) கொங்கணப் பகுதியை ஆங்கிலேயருக்கு வழங்கியதோடு கெயிக்வாரின் சுதந்திரம் அங்கீகரிக்கப்பட்டது.
A) (i) சரி
B) (ii) சரி
C) (i) மற்றும் (ii) சரி
D) (i) மற்றும் (ii) தவறு

115) பூனா அரசக்குடியிருப்பை தீயிட்டுக் கொளுத்தியவர்?

A) மாதவ் ராவ்

B) இரண்டாம் பாஜி ராவ்

C) நாராயண் ராவ்

D) சதாசிவ ராவ்

116) அஸ்தா, கிர்க்கி, கோர்கான் ஆகிய பகுதிகளில் பேஷ்வாவின் படைகளை வீழ்த்தியவர்?

A) கனோஜி ஆங்கிரே

B) ஸ்டூவர்ட் எல்பின்ஸ்டோன்

C) நானா சாகிப்

D) ஜெனரல் ஸ்மித்

117) கீழ்க்கண்டவற்றுள் மூன்றாம் ஆங்கிலேய – மராத்தியப் போரின் விளைவுகள் எவை?

A) மூன்றாம் ஆங்கிலேய – மராத்தியப் போரின் விளைவுகள் : பேஷ்வா முறையை ரத்து செய்த ஆங்கிலேயர்கள் அனைத்து பேஷ்வா பகுதிகளையும் இணைத்துக் கொண்டனர்.

B) உரிமைப்படி ஜாகீர்களைக் கொண்டிருந்தவர்களின் நிலம் அவர்களுக்கே வழங்கப்பட்டது.

C) இரண்டாம் பாஜி ராவ் 1851இல் மரணமடையும் வரை வருடாந்திர ஒய்வூதியத்தின் கீழ் சிறைக்கைதியாகவே விளங்கினார்.

D) இவை அனைத்தும்

118) கீழ்க்கண்டவற்றுள் மூன்றாம் ஆங்கிலேய – மராத்தியப் போரின் விளைவுகளுள் அல்லாதது?

A) பேஷ்வாவின் வழித்தோன்றலான பிரதாப் சிங் சதாராவிலிருந்து உருவாக்கப்பட்ட ஒரு சிறிய அரசாங்கத்துக்கு அரசராக உருவாக்கப்பட்டார்.

B) இரண்டாம் பாஜிராவால் உருவாக்கப்பட்ட போன்ஸ்லே, ஹோல்கர், சிந்தியா ஆகியோரின் பகுதிகளை உள்ளடக்கிய மராத்திய கூட்டமைப்பு கலைக்கப்பட்டது.

C) பூனாவின் அரசபிரதிநிதியாக இருந்த மவுண்ட் ஸ்டூவர்ட் எல்பின்ஸ்டோன் பம்பாய் ஆளுநராக ஆனார்.

D)A) மற்றும்B)

119) கீழ்க்கண்டவற்றுள் சரியான கூற்றினைத் தேர்ந்தெடு.

i ) பேஷ்வா (முதன்மை அமைச்சர்) என்பவர் சிவாஜியின் அஷ்டபிரதானக் கட்டமைப்பில் ஒருவர்.

ii ) இது வாரிசு முறையில் மரபுவழியாகக் கிடைப்பது.

A) (i) சரி

B) (ii) சரி

C) (i) மற்றும் (ii) சரி

D) (i) மற்றும் (ii) தவறு

120) பேஷ்வாவின் பதவியைச் சிறப்புமிக்கதாகவும் மரபுவழி சார்ந்ததாகவும் மாற்றியவர்?

A) மாதவ் ராவ்

B) இரண்டாம் பாஜி ராவ்

C) பாலாஜி விஸ்வநாத்

D) முதலாம் பாஜிராவ்

121) மராத்திய நிர்வாகத்தின் மையம் எங்கிருந்து செயல்பட்டது?

A) பூனா

B) சதாரா

C) ராய்கர்

D) கோல்ஹாபூர்

122) கீழ்க்கண்டவற்றுள் சரியான கூற்றினைத் தேர்ந்தெடு.

i ) அனைத்து நிலைகளைச் சேர்ந்த அரசு ஊழியர்களின் சம்பளம் மற்றும் உரிமைகள், சிவில், இராணுவம் மற்றும் மதத்தலைவர்களின் வரவு செலவுகளும் நிர்வாக மையத்தில் கையாளப்பட்டன.

ii ) அனைத்து வருவாய்கள், அனைத்து மான்யங்கள், ஆளுகையின் கீழ் இருந்த வெளிநாட்டுப் பகுதிகளிலிருந்து வசூலிக்கப்பட்ட தொகை அனைத்தும் தினசரி பதிவேட்டில் பராமரிக்கப்பட்டன.

A) (i) சரி

B) (ii) சரி

C) (i) மற்றும் (ii) சரி

D) (i) மற்றும் (ii) தவறு

123) பெரிய மாகாணங்களை ஆட்சி செய்த மாகாண ஆளுநர்கள் எவ்வாறு அழைக்கப்பட்டனர்?

A) சர் – சுபாஷ்தார்கள்

B) மம்லத்தார்

C) காமாவிஸ்தார்

D) தேஷ்பாண்டே

124) மாவட்டங்களில் பேஷ்வாக்களின் பிரதிநிதிகளாக விளங்கியவர்?

A) மம்லத்தார்

B) தேஷ்முக்

C) தேஷ்பாண்டே

D) பகிர்கர்

125) கீழ்க்கண்டவற்றுள் சரியான கூற்றினைத் தேர்ந்தெடு.

i ) பொதுப் பணம் தவறாகக் கையாளப்படுவதைத் தடுக்கும் வகையில் மராத்திய அரசு பெரும் தொகையை ரசத் என்ற பெயரில் முன் பணமாக மம்லத்தார்கள் மற்றும் இதர அதிகாரிகளிடமிருந்து வசூலித்தது.

ii ) எழுத்தர்களுக்கும் இதர அடிநிலை ஊழியர்களுக்கும் ஆண்டில் 10 அல்லது 11 மாதங்கள் ஊதியம் வழங்கப்பட்டது.

A) (i) சரி

B) (ii) சரி

C) (i) மற்றும் (ii) சரி

D) (i) மற்றும் (ii) தவறு

126) மராத்திய நிர்வாகத்தில் தலைமை கிராம அதிகாரியாக விளங்கியவர் யார்?

A) பட்டேல்கள்

B) குல்கர்னி

C) ஹஜாரிகள்

D) கொத்வால்

127) மராத்திய நிர்வாகத்தில் பட்டேலுக்கு உதவியாக செயல்பட்டவர் யார்?
A) பட்டேல்கள்
B) குல்கர்னி
C) கொத்வால்
D) ஹவில்தார்கள்

128) நகரங்களிலும் மாநகரங்களிலும் தலைமை அதிகாரி எவ்வாறு அழைக்கப்பட்டார்?
A) பட்டேல்கள்
B) குல்கர்னி
C) கொத்வால்
D) ஹவில்தார்கள்

129) கீழ்க்கண்டவற்றுள் சரியான கூற்றினைத் தேர்ந்தெடு.
i ) சிவாஜியின் ஆட்சியில் பின்பற்றப்பட்ட, விவசாய உற்பத்திப் பொருள்களைப் பகிர்ந்து கொள்ளும் நடைமுறையைப் பேஷ்வாக்கள் கைவிட்டனர்.
ii ) அரசுக்கு ஆண்டுதோறும் ஒரு குறிப்பிட்ட தொகை என்ற வகையில் நிலம் வழங்கப்பட்டிருந்தது.
A) (i) சரி
B) (ii) சரி
C) (i) மற்றும் (ii) சரி
D) (i) மற்றும் (ii) தவறு

130) கீழ்க்கண்டவற்றுள் சரியான கூற்றினைத் தேர்ந்தெடு.
i ) கட்டணத்தின் பேரில் மரங்களை வெட்டுவதற்கும், மேய்ச்சல் வெளிகளைப் பயன்படுத்தவும் உரிமங்கள் வழங்கப்பட்டன.
ii ) புல், மூங்கில், எரிபொருள், தேன் போன்ற பொருட்களை விற்பதன் மூலமும் வருவாய் கிடைத்தது.
A) (i) சரி
B) (ii) சரி
C) (i) மற்றும் (ii) சரி
D) (i) மற்றும் (ii) தவறு

131) கீழ்க்கண்டவற்றுள் சரியான கூற்றினைத் தேர்ந்தெடு.
i ) பயிர் வகைகள், நீர்ப்பாச ன வசதிகள், நிலத்தின் உற்பத்தித்திறன் ஆகியவற்றின் அடிப்படையில் நிலம் மூன்று வகையாகப் பிரிக்கப்பட்ட து.
ii ) உயர் நிர்வாகத்திடம் அவர்களின் உரிமைகளை எடுத்துரைக்க குல்கர்னி மூலமாக மட்டுமே முடிந்தது.
A) (i) சரி
B) (ii) சரி
C) (i) மற்றும் (ii) சரி
D) (i) மற்றும் (ii) தவறு

132) சௌத் என்பது கீழ்க்கண்ட எந்த வகையில் பிரிக்கப்பட்டிருந்தது?
A) ஆட்சியாளருக்கு 35%, இராணுவத் தளபதிகளுக்கு 56%, பண்டிட் சச்சீவுக்கு 3%, வரி வசூல் செய்வோருக்கு 6%.
B) ஆட்சியாளருக்கு 25%, இராணுவத் தளபதிகளுக்கு 66%, பண்டிட் சச்சீவுக்கு 6%, வரி வசூல் செய்வோருக்கு 3%.
C) ஆட்சியாளருக்கு 20%, இராணுவத் தளபதிகளுக்கு 60%, பண்டிட் சச்சீவுக்கு 16%, வரி வசூல் செய்வோருக்கு 4%.
D) ஆட்சியாளருக்கு 25%, இராணுவத் தளபதிகளுக்கு 66%, பண்டிட் சச்சீவுக்கு 9%, வரி வசூல் செய்வோருக்கு 1%.

133) கீழ்க்கண்டவற்றுள் சரியான கூற்றினைத் தேர்ந்தெடு.
i ) அரசுக்குக் காப்புரிமைத் தொகை செலுத்தி அதற்கான உரிமத்தைப் பெற்ற பிறகு பொற்கொல்லர் நாணயங்களை உருவாக்கித் தந்தார்கள்.
ii ) அனைத்துத் தனியார் நாணயத் தொழிற்சாலைகளும் 1760இல் மூடப்பட்டு ஒரே ஒரு மத்திய நாணயத் தொழிற்சாலை உருவாக்கப்பட்டது.
A) (i) சரி
B) (ii) சரி
C) (i) மற்றும் (ii) சரி
D) (i) மற்றும் (ii) தவறு

134) பின்வருவனவற்றுள் மராத்தியர் காலத்தில் விதிக்கப்பட்ட வரிகள் எவை?
A) தேஷ்முக்கு, தேஷ்பாண்டே வைத்திருந்த நிலத்தின் மீதான வரி
B) கிராம மகர்கள் வைத்திருந்த நிலத்தின் மீதான வரி
C) கிணற்றுப் பாசன வசதி கொண்ட நிலத்தின் மீதான வரி.
D) இவை அனைத்தும்

135) பின்வருவனவற்றுள் மராத்தியர் காலத்தில் விதிக்கப்பட்ட வரிகளுள் அல்லாதது?
A) விதவைகள் மறுமணத்துக்கான வரி
B) செம்மறி ஆடு, எருமை மாடு மீதான வரி
C) மேய்ச்சல் நில வரி
D) குழந்தைப்பேறு வரி

136) வரி செலுத்துபவரின் ஒருவருட வருமானத்துக்குச் சமமான வரியாக வசூலிக்கப்பட்ட வரி?
A) குர்ஜா பட்டி
B) பகிர்கர்
C) சவுத்
D) சர்தேஷ்முக்

137) காவலர்களாக ஒவ்வொரு கிராமத்திலும் பணியில் ஈடுபட்டவர்கள் யாவர்?
A) பட்டேல்கள்
B) ஜமால்தார்
C) மகர்கள்
D) ஹவில்தார்கள்

138) கீழ்க்கண்டவற்றுள் கொத்வாலின் பணிகள் எவை?
A) விலைகளைக் கண்காணிப்பது
B) சிவில் வழக்குகளை விசாரிப்பது
C) மக்கள் தொகைக் கணக்கெடுப்பு

D) இவை அனைத்தும்

139) கீழ்க்கண்டவற்றுள் சரியான கூற்றினைத் தேர்ந்தெடு.

i ) நீதித்துறை முறைப்படுத்தப்பட்டதாக இல்லை, சமரசப் பேச்சுவார்த்தைக்கு முன்னுரிமை தரப்பட்டது.

ii ) பஞ்சாயத்து என்பது மிகவும் சக்திவாய்ந்த நிறுவனமாகும்.

A) (i) சரி

B) (ii) சரி

C) (i) மற்றும் (ii) சரி

D) (i) மற்றும் (ii) தவறு

140) கிரிமினல் வழக்குகளில் நீதித்துறை அதிகாரிகளின் சரியான படிநிலையை தேர்ந்தெடு.

A) ராஜா > பேஷ்வா > துணை சுபாதார் > பட்டேல்

B) ராஜா > துணை சுபாதார் > பேஷ்வா > பட்டேல்

C) பேஷ்வா > பட்டேல் > ராஜா > துணை சுபாதார்

D) பேஷ்வா > துணை சுபாதார் > பட்டேல் > ராஜா

141) கீழ்க்கண்டவற்றுள் சரியான கூற்றினைத் தேர்ந்தெடு.

i ) பேஷ்வாக்களின் கீழ் மராத்திய இராணுவ அமைப்பு முகலாய இராணுவ அமைப்பை போன்று அமைக்கப்பட்டது.

ii ) சிவாஜி பின்பற்றிய இராணுவ அமைப்பின் முக்கிய அம்சங்களைப் பேஷ்வாக்கள் பின்பற்றவில்லை.

A) (i) சரி

B) (ii) சரி

C) (i) மற்றும் (ii) சரி

D) (i) மற்றும் (ii) தவறு

142) கீழ்க்கண்டவற்றுள் சரியான கூற்றினைத் தேர்ந்தெடு.

i ) மராத்திய பகுதிகளிலிருந்து சிவாஜி படைவீரர்களைத் தேர்ந்தெடுத்தார்.

ii ) பேஷ்வாக்கள் நாட்டின் அனைத்துப் பகுதிகளிலிருந்தும் அனைத்து வ கு ப் பு க ளி லி ரு ந் து ம் ( ப ழ ங் கு டி யி ன ர் உட்பட) படைவீரர்களைச் சேர்த்தனர்.

A) (i) சரி

B) (ii) சரி

C) (i) மற்றும் (ii) சரி

D) (i) மற்றும் (ii) தவறு

143) மராத்திய இராணுவத்தின் முக்கிய பலமாகக் கருதப்பட்டது எது?

A) காலாட்படை

B) குதிரைப்படை

C) ஆயுதப்படை

D) பீரங்கிப்படை

144) எந்தப்படையில் சேவை புரிய மராத்தியர் அதிக ஆர்வம் காட்டினார்கள்?

A) காலாட்படை

B) குதிரைப்படை

C) ஆயுதப்படை

D) பீரங்கிப்படை

145) கீழ்க்கண்டவற்றுள் சரியான கூற்றினைத் தேர்ந்தெடு.

i ) மராத்திய வீரர்களுடன் ஒப்பிடுகையில் மராத்திய காலாட்படையிலிருந்த அராபியர், ரோகில்லாக்கள், சீக்கியர், சிந்திக்கள் ஆகியோருக்கு அதிக ஊதியம் வழங்கப்பட்ட து.

ii ) மராத்திய ஆயுதப்படையில் பெரிதும் போர்த்துகீசியரும் இந்தியக் கிறித்தவர்களும் இடம் பெற்றிருந்தனர்.

A) (i) சரி

B) (ii) சரி

C) (i) மற்றும் (ii) சரி

D) (i) மற்றும் (ii) தவறு

146) கொங்கணம், கண்டேரி, விஜயதுர்க் ஆகிய இடங்களில் கடற்படைத் தளங்களைக் கட்டியவர்?

A) மாதவ் ராவ்

B) இரண்டாம் பாஜி ராவ்

C) பாலாஜி விஸ்வநாத்

D) முதலாம் பாஜிராவ்

147) தனது ஆட்சிக்காலத்தில் நயங்காரா அமைப்பை உருவாக்கியவர் யார்?

A) கிருஷ்ணதேவராயர்

B) ஔரங்கசீப்

C) சிவாஜி

D) திருமலை நாயக்கர்

148) கீழ்க்கண்டவற்றுள் சரியான கூற்றினைத் தேர்ந்தெடு.

i ) சோழ சாம்ராஜ்யத்தின் பகுதியாக முதலிலிருந்த தஞ்சாவூர் பிறகு பாண்டிய அரசின் பகுதியாக உருவானது.

ii ) இது மதுரை சுல்தானியத்தின் பகுதியாக உருவெடுத்தது. கடைசியில் நாயக்கர் கைகளுக்குச் சென்றது

A) (i) சரி

B) (ii) சரி

C) (i) மற்றும் (ii) சரி

D) (i) மற்றும் (ii) தவறு

149) செஞ்சிக்கு எதிரான முகலாயத் தாக்குதலில் செஞ்சிக்கோட்டையின் கிலாதாராக பணியில் அமர்த்தப்பட்டவர்?

A) சுவரூப் சிங்

B) ராஜா தேசிங்கு

C) ராஜாராம்

D) கங்காதர ராவ்

150) கீழ்க்கண்டவற்றுள் சரியான கூற்றினைத் தேர்ந்தெடு.

i ) முகலாய மன்னருக்குக் கப்பம் கட்டமறுத்ததை அடுத்து நவாப் சதத் – உல் – லா கானின் கோபத்திற்கு ராஜா தேசிங்கு ஆளானார்.

ii ) ராஜா தேசிங்கு நவாபுக்கு எதிராக வெளிப்படுத்திய வீரம் மக்களிடையே கதைப் பாடல்களாக உருவெடுத்தது.

A) (i) சரி

B) (ii) சரி

C) (i) மற்றும் (ii) சரி

D) (i) மற்றும் (ii) தவறு

151) தஞ்சாவூரில் 1676இல் தன்னை அரசராக அறிவித்த மராத்திய தளபதி?

A) வெங்கோஜி

B) சாந்தாஜி

C) சரபோஜி

D) ஷாஜி

152) கீழ்க்கண்டவற்றுள் சரியான கூற்றினைத் தேர்ந்தெடு.

i ) கர்நாடகத்தின் மீது 1677இல் படையெடுத்த சிவாஜி சந்தாஜியை அகற்றிவிட்டுத் தனது ஒன்றுவிட்ட சகோதரர் வெங்கோஜியை அப்பதவியில் அமர்த்தினார்.

ii ) அவரது மறைவுக்குப் பிறகு அவரது மகன் சரபோஜி தஞ்சாவூரை ஆண்டார்.

A) (i) சரி

B) (ii) சரி

C) (i) மற்றும் (ii) சரி

D) (i) மற்றும் (ii) தவறு

153) ஷாஜிக்கு பின் ஆட்சிக்கு வந்தவர்களைக் கால வரிசைப் படி எழுதவும்.

A) சரபோஜி, துக்கோஜி, பிரதாப் சிங், துல்ஜாஜி

B) பிரதாப் சிங், துல்ஜாஜி, சரபோஜி, துக்கோஜி

C) துல்ஜாஜி, சரபோஜி, துக்கோஜி, சரபோஜி

D) துக்கோஜி, பிரதாப் சிங், துல்ஜாஜி, சரபோஜி

154) கீழ்க்கண்டவற்றுள் சரியான கூற்றினைத் தேர்ந்தெடு.

i ) பத்து வயதான இரண்டாவது சரபோஜி அரியணை ஏறியபோது துல்ஜாஜியின் சகோதரர் அமர் சிங் ஆட்சியை நிர்வகித்தார்.

ii ) வாரிசு அரசியலை எதிர்த்த ஆங்கிலேயர் இரண்டாவது சரபோஜியின் மீது ஒப்பந்தம் ஒன்றை திணித்தனர்.

A) (i) சரி

B) (ii) சரி

C) (i) மற்றும் (ii) சரி

D) (i) மற்றும் (ii) தவறு

155) தஞ்சாவூரை ஆண்ட மராத்திய போன்ஸ்லே சாம்ராஜ்யத்தின் கடைசி ஆட்சியாளர் யார்?

A) இரண்டாம் சரபோஜி

B) பிரதாப் சிங்

C) துல்ஜாஜி

D) துக்கோஜி

156) கீழ்க்கண்டவற்றுள் சரியான கூற்றினைத் தேர்ந்தெடு.

i ) மேற்கத்திய அறிவியல் மற்றும் மருத்துவத்தைக் கையாளும் மருத்துவராக சரபோஜி திகழ்ந்தார்.

ii ) இரண்டாம் சரபோஜி ஃப்ரெட்ரிக் ஸ்வார்ட்ஸ் மூலமாகக் கல்வி பயின்றார்.

A) (i) சரி

B) (ii) சரி

C) (i) மற்றும் (ii) சரி

D) (i) மற்றும் (ii) தவறு

157) இரண்டாம் சரபோஜியின் அதிநவீனத் திட்டமாக இருந்தது எது?

A) ஒரு அச்சகத்தை நிறுவுவது

B) சரஸ்வதி மஹால் நூலகத்தை மேம்படுத்துவது

C) அரசவை மூலம் நவீனப் பொதுப் பள்ளிகளை நிறுவி ஆங்கிலம் மற்றும் பிரதேச மொழிகளில் பாடங்கள் இலவசமாகக் கற்பிக்கப்பட வேண்டும்

D) அன்னசத்திரங்கள் கட்டுதல்

158) கீழ்க்கண்டவற்றுள் சரியான கூற்றினைத் தேர்ந்தெடு.

i ) சரஸ்வதி மஹால் நூலகம் நாயக்க மன்னர்களால் கட்டப்பட்டு இரண்டாம் சரபோஜி மன்னரால் செறிவூட்டப்பட்ட து.

ii ) மராத்தி மொழியில் அமைந்த ஆவணங்கள் மோடி எழுத்து வடிவில் எழுதப்பட்டன.

A) (i) சரி

B) (ii) சரி

C) (i) மற்றும் (ii) சரி

D) (i) (ii) தவறு

159) கீழ்க்கண்டவற்றுள் சரியான கூற்றினைத் தேர்ந்தெடு.

i ) தரங்கம்பாடி சமய பரப்புக்குழுவைச் சேர்ந்த அறிஞர் சி.எஸ். மார்க்ஸ் என்பவரைக் கல்வித் துறையின் முன்னோடியாக மன்னர் சரபோஜி கருதினார்.

ii ) பாடத்திட்டம் மற்றும் கல்விப்பயிற்றும் முறைகளில் அவர் நவீன முறைகளையும் மாணவர்களுக்கு உறைவிடப்பள்ளி முறையை அறிமுகம் செய்தார்.

A) (i) சரி

B) (ii) சரி

C) (i) மற்றும் (ii) சரி

D) (i) மற்றும் (ii) தவறு

160) கீழ்க்கண்டவற்றுள் சரியான கூற்றினைத் தேர்ந்தெடு.

i ) சென்னை ஆளுநர் தாமஸ் மன்றோ 1820ஆம் ஆண்டில் தொடக்கப் பொதுப்பள்ளிகளுக்கான ஒரு திட்டத்தை யோசனையாக கூறினார்.

ii ) கிறித்தவர் அல்லாத மாணவர்களுக்கு ஆங்கில வழிக் கல்வி கிடைக்காத சூழல் நிலவிய காலகட்டம் அதுவாகும்.

A) (i) சரி

B) (ii) சரி

C) (i) மற்றும் (ii) சரி

D) (i) மற்றும் (ii) தவறு

161) கீழ்க்கண்டவற்றுள் சரியான கூற்றினைத் தேர்ந்தெடு.

i ) கம்பெனி அரசு 1841ஆம் ஆண்டு வரை நவீனப் பள்ளிகளை உள்ளூர் குழந்தைகளுக்காகச் சென்னையில் ஏற்படுத்தவேவில்லை

ii ) ஜெர்மானிய சமயப்பரப்புக்குழு ஆங்கில வழி மற்றும் வட்டார மொழிப்பள்ளிகள் பலவற்றைத் தெற்கு மாகாணங்களில் 1707ஆம் ஆண்டு முதல் நடத்தியுள்ளனர்.

A) (i) சரி

B) (ii) சரி

C) (i) மற்றும் (ii) சரி

D) (i) மற்றும் (ii) தவறு

162) கீழ்க்கண்டவற்றுள் சரியான கூற்றினைத் தேர்ந்தெடு.

i ) சரபோஜி, சமயபரப்புக்குழு மற்றும் காலனி அரசுக்கு முன்னோடியாக 1803ஆம் ஆண்டிலேயே தஞ்சாவூரில் கிறித்தவர்கள் அல்லாத உள்ளூர் குழந்தைகளின் கல்விக்காக முதலாவது நவீனப் பொதுப்பள்ளிகளை நிறுவினார்.

ii ) உயர் கல்வி நிறுவனங்களை இந்திய அரசர்கள் நடத்திய போதிலும் அவர்கள் தொடக்கப் பள்ளிகளை நடத்தியதில்லை என்பது குறிப்பிடத்தகுந்தது.

A) (i) சரி

B) (ii) சரி

C) (i) மற்றும் (ii) சரி

D) (i) மற்றும் (ii) தவறு

163) கீழ்க்கண்டவற்றுள் சரியான கூற்றினைத் தேர்ந்தெடு.

i ) ஆதரவற்றவர்கள் மற்றும் ஏழை மாணவர்களுக்கு எனத் தஞ்சாவூர் மற்றும் இதர அண்டை இடங்களில் இலவச தொடக்க மற்றும் உயர்நிலைப் பள்ளிகளை நிறுவி நிர்வகித்தது மன்னர் சரபோஜியின் மிக முக்கியமான முன்முயற்சியாகும்.

ii ) அனைத்து நிலைகளிலான பள்ளிகள், நன்கொடைப் பள்ளிகள், கல்லூரிகள், சமஸ்கிருத உயர் கல்விக்கான பாடசாலைகள் ஆகியன அவற்றில் அடங்கும்.

A) (i) சரி

B) (ii) சரி

C) (i) மற்றும் (ii) சரி

D) (i) மற்றும் (ii) தவறு

164) கீழ்க்கண்டவற்றுள் சரியான கூற்றினைத் தேர்ந்தெடு.

i ) புதிய அல்லது நவீன கல்வி முறைக்காக 'நவவித்யா' முறையை அரசவை நடத்திய இந்தப் பள்ளிகளில் அறிமுகம் செய்தது மற்றொரு முக்கிய முன்முயற்சியாகும்.

ii ) 1803இல் ஆண்டில் நிறுவப்பட்ட முக்தாம்பாள் சத்திரம் அரசரின் விருப்பமான அன்ன சத்திரமாகும்.

A) (i) சரி

B) (ii) சரி

C) (i) மற்றும் (ii) சரி

D) (i) மற்றும் (ii) தவறு

165) மதப்பரப்பாளர்கள் நடத்திய ஏழைக் கிறித்தவ மாணவர்களுக்கான பள்ளி எங்கு அமைந்திருந்தது?

A) கண்ணந்தன்குடி

B) செம்மங்குடி

C) கருந்தட்டான் குடி

D) மருதங்குடி

166) கீழ்க்கண்டவற்றுள் சரியான கூற்றினைத் தேர்ந்தெடு.

i ) ஆளுநர் மன்றோவின் கல்விக் கணக்கெடுப்புக்காக உருவாக்கப்பட்ட 1823ஆம் ஆண்டின் அறிக்கைப்படி தஞ்சாவூர் முழுவதும் இருந்த 44 பள்ளிகளில் அரசவை மூலமாக 21 இலவச பள்ளிகள் நடத்தப்பட்டன.

ii ) சமயப் பரப்பாளர்கள் 19 பள்ளிகளையும், ஆலய நிர்வாகம் ஒரு பள்ளியையும் நடத்தின.

A) (i) சரி

B) (ii) சரி

C) (i) மற்றும் (ii) சரி

D) (i) மற்றும் (ii) தவறு

167) கீழ்க்கண்டவற்றுள் சரியான கூற்றினைத் தேர்ந்தெடு.

i ) ம னி தர்க ளு க்கா கவும் விலங்குகளுக்காகவும் மூலிகை மருந்துகளைத் தயாரித்த 'தன்வந்தரி மஹால்' என்ற ஆராய்ச்சி நிறுவனத்தை சரபோஜி நிறுவினார்.

ii ) நோயாளிகளின் ஆவணங்களைப் பராமரிக்கும் முறையும் அறிமுகம் செய்யப்பட்டது.

A) (i) சரி

B) (ii) சரி

C) (i) மற்றும் (ii) சரி

D) (i) மற்றும் (ii) தவறு

168) சரபோஜி மன்னர் உருவாக்கிய ஆராய்ச்சி புத்தகம் எத்தனை தொகுதிகளை உள்ளடக்கியது?

A) 18

B) 20

C) 22

D) 16

169) கீழ்க்கண்டவற்றுள் சரியான கூற்றினைத் தேர்ந்தெடு.

i ) அரசவை அதிகாரிகள் பெரும்பாலும் பிராமணர்களுக்கு ஐரோப்பிய பயன்பாட்டு அறிவு, தொழில்நுட்பங்கள், கலைகள், ஆகியவற்றில் பயிற்சி கிடைத்து அவர்கள் காலனி கால நவீனத்துவத்தின் முன்னணி முகவர்களாக மாறினார்கள்.

ii ) ஆங்கிலக் கல்வி கற்ற துபாஷிகள், எழுத்தர்கள், ஐரோப்பிய மற்றும் இந்திய அரசவைகளுக்கு இடையே மத்தியஸ்தம் செய்த இந்து மற்றும் கிறித்தவ மொழிபெயர்ப்பாளர்கள் பல பொறுப்புக்களை ஏற்க முடிந்தது.

A) (i) சரி

B) (ii) சரி

C) (i) மற்றும் (ii) சரி

D) (i) மற்றும் (ii) தவறு

170) கீழ்க்கண்டவற்றுள் இரண்டாம் சரபோஜி எழுதாத புத்தகம் என்ன?

A) குமாரசம்பவ சம்பு

B) தேவேந்திர குறவஞ்சி

C) முத்ரராஷ்ஸ்சாயா

D) குமாரசம்பவம்

171) கீழ்க்கண்டவற்றுள் சரியான கூற்றினைத் தேர்ந்தெடு.

i ) கர்நாடக இசையில் மேற்கத்திய இசைக்கருவிகளான கிளாரினட், வயலின் ஆகிய கருவிகளை சரபோஜி அறிமுகம் செய்தார்.

ii ) ஓவியம் வரைதல், தோட்டமிடுவது, நாணயங்களைச் சேகரிப்பது, தற்காப்புக் கலைகள், ரதப் போட்டிகள், வேட்டை, எருதுச் சண்டை ஆகியவற்றைப் பிரபலப்படுத்துவதில் சரபோஜி ஆர்வம் கொண்டிருந்தார்.

A) (i) சரி

B) (ii) சரி

C) (i) மற்றும் (ii) சரி

D) (i) மற்றும் (ii) தவறு

172) தஞ்சாவூர் அரண்மனை வளாகத்தில் தமிழ்நாட்டின் முதலாவது வன உயிரியல் பூங்காவை அவர் அமைத்தவர்?

A) முதலாம் சரபோஜி

B) இரண்டாம் சரபோஜி

C) வெங்கோஜி

D) துல்ஜாஜி

173) இரண்டாம் சரபோஜி எத்தனை ஆண்டு காலம் ஆட்சி புரிந்தார்?

A) 40

B) 35

C) 45

D) 52

174) "முடிசூடிய பல தலைவர்களைப் நான் பார்த்து இருக்கிறேன். ஆனால் இவர் தவிர எவரிடமும் அது இளவரசத் தன்மையோடு அலங்கரித்ததில்லை." என்று சரபோஜி குறித்து கூறியவர் யார்?

A) சி.எஸ்.ஜான்

B) ஜான் பனியன்

C) ஹீபர்

D) ஹுக்ஸ்

175) பொருத்துக

i. அமத்யா – 1. அரசரின் நடவடிக்கைகள் பற்றிய ஆவணங்கள்

ii. சுமந்த் – 2. பொது ஒழுக்க நடைமுறைகள்

iii. பண்டிட் ராவ் – 3. போர் மற்றும் அமைதி

iv. வாக்கிய நாவிஸ் – 4. அரசின் அனைத்து பொது கணக்குகள்

A) 4, 1, 2, 3

B) 1, 2, 4, 3

C) 4, 3, 2, 1

D) 1, 4, 2, 3

winmeen.com